பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11. 09. 2024 — 7. 15
புதன்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. பிரதமர் திரு நரேந்திரமோடி உத்திரபிரதேச மாநிலம் நொய்டாவில் செமிக்கான் இந்தியா மாநாட்டினை இன்று தொடங்கி வைக்கிறார்.
2. ஜெர்மனி சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சருடன் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.
3. இரண்டாவது ஆசிய பசிபிக் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.
4. குரங்கு அம்மை நோய் பரவுவதை தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
5. 45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரியில் இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி உத்திரபிரதேச மாநிலம் நொய்டாவில் செமிக்கான் இந்தியா மாநாட்டினை இன்று தொடங்கி வைக்கிறார்.

செமிகண்டக்கர் துறையில் எதிர்காலத்தை வடிவமைத்தல் என்ற கருப்பொருளில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

செமிகண்டக்டர் வடிவமைப்பு. உற்பத்தி, தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றில் இந்தியாவை உலகளாவிய மையமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கில் மூன்று நாள் மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் தலைவர்கள், தொழில்துறை வல்லுநர்கள், உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

வாகன உற்பத்தித் துறையில் சர்வதேச தரத்திலான வழிமுறைகளை தொழில் நிறுவனங்கள் பின்பற்ற வேண்டுமென பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய வாகன உற்பத்தியாளர் சங்கத்தின் ஆண்டு கூட்டத்தில் அவரது உரை வாசிக்கப்பட்டது.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய வாகன உற்பத்தி நிறுவனங்களும் முக்கிய பங்காற்றும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இத்துறையில் உள்ள நிறுவனங்கள் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி நடைமுறைகளை கையாள வேண்டுமென்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பசுமை மற்றும் தூய்மை போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்து ஆண்டுகளில் வாகன உற்பத்தித்துறை மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

சிறந்த உள்கட்டமைப்புடன்கூடிய நவீன அதிவேக சாலைகள் அமைக்கப்படுவதாகவும், இது இத்துறையை மேலும் வளர்ச்சியடைய செய்யும் என்றும் திரு நரேந்திரமோடி தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

ஜெர்மனி சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் **Anna lena baerbock**-வுடன் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.

மின்சார வாகனங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன், காஸா நிலவரங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டதாக அவர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக தூதர்கள் நிலையிலான ஆண்டு கூட்டத்தில் பங்கேற்று பேசிய திரு ஜெய்சங்கர், இந்தியா – ஜெர்மனி இடையே வர்த்தகத்தை மேலும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளதாகக் கூறினார்.

பாதுகாப்புத்துறையிலும், பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா வரலாற்று சாதனை படைத்துள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் பதக்கம் வென்றவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்ற அவர் தங்கப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 75 லட்சம் ரூபாயும், வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு 50 லட்சம் ரூபாயும், வெண்கலப்பதக்கம் வென்றவர்களுக்கு 30 லட்சம் ரூபாய்க்குமான காசோலைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், இதுவரை இல்லாத அளவாக இந்தியா 29 பதக்கங்களை வென்றுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று கூறினார்.

விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான உதவியையும், தரமான பயிற்சியையும் அரசு தொடர்ந்து வழங்கும் என்று திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தில் இரண்டு கோடியே 65 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களின் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்களுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசினார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக இரண்டு கோடி வீடுகள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் ஏழைகளுக்கு எளிதில் வீடுகள் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

குரங்கு அம்மை நோய் பரவுவதை தடுக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மேம்பட்ட கண்காணிப்பு, ஆய்வகங்கள் தயார் நிலை, விழிப்புணர்வு பிரச்சார இயக்கங்கள் போன்றவை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு செவிலியர்களுக்கான ப்ளாரன்ஸ் நைட்டிங்கல் விருதுகளை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

புதுதில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் அவர் இந்த விருதுகளை வழங்குகிறார்.

**[]<<<>>>[]**

பின்தங்கிய மக்களின் நலனுக்காக சிறப்புத் திட்டங்களை மத்திய அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் திரு வீரேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பின்தங்கிய மக்களின் நலன் தொடர்பாக, மாநில அரசுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற இரண்டு நாள் சிந்தனை முகாம் புதுதில்லியில் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய அமைச்சர், மத்திய அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்களை எடுத்துரைத்தார்.

இந்த கூட்டத்தில் உத்திரபிரதேசம், கேரளா, மத்திய பிரதேசம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதில் பஞ்சாயத்துராஜ் அமைப்புகள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய பஞ்சாயத்துராஜ் துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங் கூறியுள்ளார்.

சமூக நீதி மற்றும் சமூக பாதுகாப்புடன் கூடிய ஊராட்சி என்ற கருப்பொருளுடன் மூன்று நாள் தேசிய மாநாட்டை பாட்னாவில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், பஞ்சாயத்து அமைப்புகளுக்கு மத்திய அரசு தேவையான வளங்களையும், திறன்களையும் வழங்கி வருவதாகக் கூறினார்.

இவற்றை அந்த அமைப்புகள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த மாநாட்டில் மத்திய பஞ்சாயத்துராஜ் இணை அமைச்சர் திரு எஸ் பி சிங் பாஹல், பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

இரண்டாவது ஆசிய பசிபிக் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 41 நாடுகளைச் சேர்ந்த 250-க்கும் மேற்பட்ட விமான போக்குவரத்துத்துறை பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இம்மாநாட்டின் நிறைவு நாளான நாளை பிரதமர் திரு நரேந்திரமோடி உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டுக்கு இடையே வியட்நாம், மாலத்தீவு, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் விமான போக்குவரத்து அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

ஆசிய பசிபிக் மண்டலத்தில் சிவில் விமான போக்குவரத்து துறை மேம்படுத்துவதில் இந்த மாநாடு முக்கிய கவனம் செலுத்தும் என மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாட்டில் நிலக்கரி உற்பத்தி கடந்த மாதத்தில் ஆறு புள்ளி மூன்று ஆறு சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 361 மில்லியன் டன்னாக இருந்தது எனவும், இந்த ஆண்டு அது 384 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளதாகவும் அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்ய தேவையான நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டு அவை தடையின்றி விநியோகிக்கப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சீனாவுக்கு இணையாக இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியை எட்டுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமான உள்ளன என்று தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

சென்னை ஆளுநர் மாளிகையில் இந்திய – சீன உறவுகள் குறித்த கருத்தரங்கில் பங்கேற்று பேசிய அவர், சுதந்திர இந்தியாவின் மிகப்பெரிய அச்சுறுத்தலாக சீனா-வின் எல்லை விரிவாக்கம் இருந்தது என்றார்.

சீன ஆக்கிரமிப்பை முந்தைய அரசுகள் முறையாக கையாளவில்லை என்று அவர் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் நிலைமை மாறியுள்ளதாகவும் திரு ஆர் என் ரவி குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

பிஜேபி உறுப்பினர் சேர்க்கை எட்டு நாட்களில் இரண்டு கோடியை எட்டியுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு வினோ தாவ்டே வெளியிட்டுள்ள அறிக்கையில், உறுப்பினர் சேர்க்கை குறித்து உத்திரபிரதேசம், தமிழ்நாடு உள்ளிட்ட ஒன்பது மாநிலங்களின் நிர்வாகிகளுடன் கட்சியின் மூத்த தலைவர்கள் திரு ஜெ பி நட்டா, திரு அமித்ஷா, திரு பி எல் சந்தோஷ் ஆகியோர் ஆலோசனை நடத்திய இருப்பதாக கூறியுள்ளார்.

எஞ்சிய மாநிலங்களின் நிர்வாகிகளுடன் வரும் நாட்களில் ஆலோசனை நடத்தப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனில் இந்தியா அதிக அக்கறை செலுத்தி வருவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை செயலாளர் திருமதி சுமிதா தாவ்ரா கூறியுள்ளார்.

ரஷ்யாவின் சோச்சியில் நடைபெற்ற பிரிக்ஸ் நாடுகளின் தொழிலாளர்கள் நலத்துறை பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இ-ஸ்ரம் இணையதளத்தில் இதுவரை 30 கோடி பேர் பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

இதன்மூலம் அவர்களுக்கான பலன்கள் எளிதில் சென்றடைவதாக என்று அவர் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாடு, அவர்களுக்கான மருத்துவ வசதிகள் உள்ளிட்டவற்றிலும் கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாக திருமதி சுமிதா தாவ்ரா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டி ஹங்கேரியின் குடாபஸ்டில் இன்று தொடங்குகிறது.

தொடக்க விழா நிகழ்ச்சிகள் நேற்று நடைபெற்ற நிலையில், முதல் சுற்று ஆட்டங்கள் இன்று நடைபெறுகின்றன.

பொதுப்பிரிவில் 193 அணிகளும், மகளிர் பிரிவில் 181 அணிகளு இதில் பங்கேற்கின்றன.

வரும் 23-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் ஆயிரத்து 800-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா சார்பில் பொதுப் பிரிவு அணியில் குகேஷ், ப்ரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகேசி, விதித் குஜராத்தி, ஹரி கிருஷ்ணா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மகளிர் பிரிவு அணியில் ஹரிகா, வைசாலி, தனியா சச்சிதேவ், உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

***End of News***